Arimā Nōkku

# அரிமா நோக்கு

3:2 ஆகஸ்டு 2009

ரூ.20

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

# அரிமா நோக்கு

3:2 ஜூலை 2009


வண்ணங்களும் எண்ணங்களும்
- வ. ஜெயதேவன் 03

சொல்லப்படாததும் சொல்லப்பட்டதும்
- சா. கந்தசாமி 04

ஜோசபின் எலிசபெத் பட்லர் (1828-1906) - இரா. பிரேமா 07

வினா-விடை
- சோ. ந. கந்தசாமி 16

கவிதை ஆய்வு
- சே. வை. சண்முகம் 25

Linguistic Minorities in India - a Sketch
- V. Gnanasundarm & L. Ramamoorthy 34

கேஃவி-பதில் செயல்பாடு: தொழில் நுட்பமும் அணுகுமுறைகளும் (Question Answering System: Techniques and Approaches) - லோ. சவிதா & மா. கணேசன் 39

Commentator as Critic: Naccinarkkiniyar
- P. Marudanayagam 47

இலக்கியம், சொல் அகராதி
- சுன்னாகம் அ. குமாரசுவாமிப் பிள்ளை 54

ஆனந்தரங்கப்பிள்ளை (மார்ச்சு 30, 1709-சனவரி 16, 1761)
- வ. ஜெயதேவன் 56

மொழிக்கொள்கை
மாயூரம் ச வேதநாயகம்பிள்ளை 59

தொகை அகராதியில் மானிடவியலும் மனித உரிமைகளும்
- அ. சிவபெருமான் 64

புறநானூற்றின் பதிப்புப் பின்னணியில் சில செய்திகள்
- எஸ். சாயிராமன் 68

கவிதையின் காதலன்
- பா. இரவிக்குமார் 70


நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள், துணுக்குகள்


படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும், மாற்றவும் பதிப்பாளருக்கு உரிமை உண்டு முன்இசைவின்றி இவ்விதழிலிருந்து எதனையும் எடுத்தாளலாகாது.


# தலைவாயில்


ஈரோடு தமிழன்பன்


## தமிழ் நாட்டில் மையப் பல்கலைக்கழகங்கள்

தமிழகத்தில் மையப் பல்கலைக்கழகம் முதலாவதாகத் திருவாரூரில் உருவாகக் காரணமாக உள்ளவர்கள் தமிழக மக்களின் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள். இத்தகு மையப் பல்கலைக்கழகங்கள் மற்றப் பல்கலைக் கழகங்களிலிருந்து எவ்வெவ்வாறு புதிய பரிமாணங்களைக் கொள்ளும் என்பதையும் அவற்றின் கோட்பாடுகள் செயற்பாடுகளால் இந்திய நாட்டின் பொதுவான உயர்கல்வித் தரத்தோடும், உலகின் வளர்ந்த பிறநாடுகளின் உயர்கல்வித் தரத்தோடும் எப்படியெல்லாம் அவை சமநிலைப்படும் என்பதையும் - தமிழ்மொழி வளர்ச்சியையும் தமிழர் வாழ்வு மேம்பாட்டையும் எப்படி எல்லாம் உயர்த்த அவை பாடுபட முடியும் என்பதையும் அறிய ஆவலோடு காத்திருக்கிறோம்.

*வாழ்க்கைப் போராட்டத்தில் ஒதுங்கிவிட முடியாமல்- உலகமயமாதல் தாராளமயமாதல் தனியார்மயமாதல் என்பனவற்றுக்கெல்லாம் ஒத்திசைவாக மாறிவிடும்படி உலகப் பொருளாதார ஆதிக்கத்தைக் கைகளில் வைத்திருக்கும் நாடுகள் வற்புறுத்தும் நிலையில் முற்றிலும் கரைந்து தன்னை இழந்துவிடவோ முற்றிலும் தனித்துவமாக நிற்கவோ முடியாத வரலாற்றுச் சூழல் நம் நாட்டிற்கு. படிப்பு, பயிற்சி, வேலை, ஊதியம் இவற்றோடு வாழ்வியலின் பண்பாடு- கலைசார் மனப்பான்மை ஒழுக்கம்-எல்லாமே கல்வித்தளத்தின் முக்கியக் கவனிப்புக் கூறுகளாக உள்ளன. இவற்றின் ஊடாகத் தனித்துவக் கூறுகளில் இன்றியமையாத ஒன்றாக இருப்பதும் இன அடையாளமாகப் பண்பாட்டுச் சாரங்களில் படிந்து-வரலாற்றைத் தொடர்ந்து- அவ்வினத்தோடு உடன்வருவதாகவும் இருப்பதும் தாய்மொழிதான்.*

இக்கருத்துருவத்தின் பின்னணியில் மையப் பல்கலைக்கழகங்கள் எனத் தமிழகத்தில் அமைவன நம் தாய்மொழியாம் தமிழுக்கு என்னவெல்லாம் முதன்மைப் படுத்திச் செய்யலாம் என்பதை ஆழமாக எண்ணிப்பார்க்க வேண்டும். நம் நாட்டில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், அறிவியல் என வகைமைப்படும் கல்வித் தளங்களில் தமிழ்மொழி ஒரு பாடமாகக் கைவிடப்பட்ட நிலையில் மாற்றம் இல்லை என்பதோடு-அவற்றைத் தமிழ் வழியாகக் கற்கவும் கற்பிக்கவும் முடியாத சூழல் இன்றுவரை இருந்துவருகிறது.

மைய அரசு, தமிழகத்தில் நிறுவுகின்ற பல்கலைக்கழகங்களில், தமிழ் முதுநிலைப் படிப்பு, முனைவர் பட்ட ஆய்வுப் படிப்பு என்று எங்கும் காணப்படுகிற- எளிமைப் படுத்தப்பட்ட முயற்சிகளில் முகம் காட்டக்கூடிய அமைப்புகளோ, மதிப்பியல் பட்டங்களைச் சமூகத்துப் புகழ்ஆளுமைகளுக்கும், விளம்பரமுகங்களுக்கும் அள்ளி வழங்கும் பட்டமளிப்பு விழாக்களோ மட்டும் - பெருமை தருகிற தனிச் சிறப்புகளாக இருக்க முடியாது.

மையப் பல்கலைக்கழகங்களில், செம்மொழித் தகுதி படைத்த தமிழை இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற-வெவ்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் கற்பதற்கு வாய்ப்புகள் ஏற்பட வேண்டும். ***தமிழ் மொழிக்கென ஒரு புலம்*** இருப்பதோடு, சமற்கிருதம், மராட்டி, வங்காளம், இந்தி, உருது போன்ற வளர்ந்த நிலையில் உள்ள வட இந்திய மொழிகளோடு-பிற தென்னிந்திய மொழிகளையும் உள்ளடக்கிய ***இந்திய மொழிப்புலம்*** உருவாக்கப்பட வேண்டும். அதன் முதன்மையான நோக்கம் தமிழின் விழுமிய இலக்கிய இலக்கண நூல்களை இந்தியாவின் சிறந்த மொழிகளாகிய அவற்றுக்குக் கொண்டு செல்வதாகவும், அம்மொழிகளின் இலக்கிய இலக்கணச் செல்வங்களைத் தமிழுக்குக் கொண்டு வருவதாகவும் இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, ***உலக மொழிப்புலம்*** ஒன்றை நிறுவி ஆங்கிலம், பிரெஞ்சு, இசுபானியம் ஆகிய மொழிகளிலும், சீனம், ஜப்பான், அரபு போன்ற தலைமையான ஆசிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களைப் பணிக்கு அமர்த்தி உலக அளவில்

தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கொண்டு செல்லவும் உலக இலக்கிய இலக்கணங்களைத் தமிழில் கொண்டு வரவும் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

உலகு அளாவிய நிலையில். அயல்நாட்டு மாணவர்கள் தமிழ்மொழி கற்கவும் தமிழ்க் கலைகள் கற்கவும் மையப் பல்கலைக்கழகங்களில் வகுப்பறைகளும் அரங்கங்களும் திறக்கப்பட வேண்டும். இச்செயற்பாட்டோடு இணைந்த முறையில் உறவும் ஊடாட்டமும் பெருகத் தமிழ்நாட்டு மாணவர்களில் ஆர்வமும் ஆன்ற அறிவுக்கூறும் முயற்சிமுனைப்பும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து இந்திய மொழிகள் கற்கவும் உலகமொழிகள் கற்கவும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தால்-எண்ணி இருபது ஆண்டுகளில் தமிழில் வளம் சேர்வதோடு. தமிழ்வளம் உலகமொழிகளில் சேர்வதும் உறுதி. எல்லாமே திட்டமிடல்-நெறிப்படுத்துதல்-செயற்படுத்துதல். படிநிலைக் கண்காணிப்புகள்-மதிப்பீடுகள்-என்னும் ஐம்பான் ஒழுக்கத்தைப் பொருத்துத்தான். ♦


*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*
*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
இரா. இளவரசு
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
நா. முத்துக்குமார்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும்
அயல் நாடுகளிலும் உள்ள
தமிழியல் அறிஞர்கள்,
பல்கலைக்கழகப்
பேராசிரியர்கள்
மற்றும்
படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்


# கட்டணம்

| | | |
|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/- | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |
| நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் *அரிமா நோக்கு* இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் *அரிமா நோக்கு* இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் *அரிமா நோக்கு* இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1,500 |

***தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.***


அரிமா நோக்கு
4/1083 நேரு நகர்
2 ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின் அஞ்சல்: arimaa.nokku@gmail.com
செல்: 9380626448